# ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்

## இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற துறவியின் ஒப்பில்லா வாழ்க்கை வரலாறு



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின்
35வது ஜகத்குரு சங்கராசார்யார்

பிறந்தநாள் நூற்றாண்டு
2017

ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற துறவியாவார். மிகச் சிறு வயதான பதிமூன்று வயதிலேயே துறவறம் ஏற்ற அவர், யோகமார்க்கத்தில் ஆன்மீகச் சாதனைகளை மேற்கொண்டு, தனது பதினெட்டாம் வயதிலேயே பரதத்துவத்தை உணர்ந்து அதில் நிலைத்தவராக விளங்கினார். சிருங்கேரி சாரதா பீடத்தின் 35வது ஜகத்குரு சங்கராச்சார்யராக அருள்பாலித்த அவர், இந்நாட்டின் பல்வேறு மக்களுக்கும் மாபெரும் நன்மைகள் பல செய்துள்ளார்.

இந்தப் புத்தகத்தில், அவர் மிகவும் முக்கியமாகக் கருதிய உயர்ந்த பண்புகள், அவரது வியத்தகு ஆன்மீகச் சாதனைப் பயணம், அருளின் சக்தி, எளிமை, எந்நேரமும் மகிழ்ச்சியான மனநிலையுடன் இருக்கும் பாங்கு, அனைத்து விதமான மக்களுடனும் நட்புறவு பாராட்டும் திறன், பன்முக ஆற்றல், அவர் மேற்கொண்ட யாத்திரைகள், அளித்த போதனைகள், ஜீவராசிகளின் மேல் அவர் காட்டிய கருணை போன்றவற்றை எடுத்துரைக்கும் பல நிகழ்வுகள் படக்கதையாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. எனவே சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் இப்புத்தகம் கவரும் என்பதில் ஐயம் இல்லை.

இத்தகைய மஹானின் பிறந்தநாள் நூற்றாண்டான 2017ஆம் ஆண்டில், அவரது உயரிய வாழ்க்கையைப் போற்றிக் கொண்டாடும் புத்தகம் அச்சுப்பதிப்பாக நான்கு மொழிகளில் (ஆங்கிலம், கன்னடம், தமிழ் மற்றும் ஹிந்தி) வெளியிடப்பட்டு 45,000 க்கும் மேற்பட்ட பதிப்புகள் விற்பனையாகியுள்ளன.

ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் 101வது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, இந்த நான்கு புத்தகங்களின் மின் பதிப்புகளும் 2018ஆம் ஆண்டு வெளியிடப்படுகிறது.

**First Digital Edition (Tamil)**: November 2018

**e-Book ISBN:** 978-93-5288-080-5

**Design, Script in English:** Dr. Meenakshi Lakshmanan

**Illustrations:** Art Nutzz, Chennai 600 029


**Art Work Compilation:** Dr. Rajitha Venkateswaran
Dr. Suganya Ramadoss
Dr. Meenakshi Lakshmanan

**Translation into Tamil:** Dr. Suganya Ramadoss
**Kannada:** Dr. Gowri Srinivasa
**Hindi:** Dr. Meenakshi Lakshmanan

**Published by:** Dr. Meenakshi Lakshmanan, Chennai
© Meenakshi Lakshmanan, 2018
E-mail: meenakshi.lakshmanan@gmail.com

**www.AbhinavaVidyatheertha.org**

# ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ராமா சாஸ்திரி, வெங்கடலக்ஷ்மி அம்மாள் என்ற புண்ணிய தம்பதியினர் தங்களது மகளான சீதாலக்ஷ்மியுடன் பெங்களூரில்* ஓர் எளிமையான வீட்டில் வாழ்ந்துவந்தனர்.


வெங்கடலக்ஷ்மி அம்மாள் இரண்டாவது முறை கர்ப்பவதியாய் இருந்த பொழுது, தினமும் அரச மரத்தைச் சுற்றிவந்தார்.




*1917*ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *13*ஆம் நாள் காலை நாடே தீபாவளிப் பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடி கொண்டிருந்த வேளையில், வெங்கடலக்ஷ்மி அம்மாளுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது.




ஸ்ரீநிவாசன் உரிய பருவத்தில் நகராட்சிப் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தான்.




மிகவும் புத்திசாலி மாணவனாக விளங்கியது மட்டுமல்லாமல், படிப்பில் தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்காகத் தயங்காமல் நேரம் செலவிட்டான்.

வீட்டிலும் உதவிகள் செய்கின்ற மிகவும் பரிவான சிறுவனாக விளங்கினான்.




*இந்தியாவில், கர்நாடக மாநிலத்தில் உள்ளது.


ஒருமுறை, பக்கத்து வீட்டு வாசலில் யாரோ பரிதாபமாக அழும் குரலைக் கேட்டான் ஸ்ரீநிவாசன்.
படிக்காததற்கு இதுதான் தண்டனை!
ஆ.........!
அந்த சிறுவன் வலியில் துடித்துக்கொண்டிருந்தான்.
மற்றவர்களுக்காகக் கஷ்டங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஸ்ரீநிவாசன் எப்பொழுதும் தயாராயிருந்தான்.
தயவு செய்து உங்கள் மகனுக்குச் சிறிது நேரம் ஓய்வு கொடுங்கள். அவனுக்குப் பதிலாக நான் அந்தக் கல்லைச் சுமக்கிறேன்.
அவர் ஸ்ரீநிவாசனின் பரிவினால் மனம் நெகிழ்ந்து தனது மகனைத் தண்டனையிலிருந்து விடுவித்தார்.
ஒரு நாள் ஸ்ரீநிவாசனும் அவனது நண்பர்களும் ஒரு வீட்டில் தங்களுக்கு அளிக்கப்பட்ட உணவு காரமானது என்று தெரியாமல் சாப்பிட்டுவிட்டனர்.
தண்ணீர்!
வெல்லம்!
இப்படிக் கூச்சலிட என்ன அவசியம்?
எங்கே ஒரு பிடி பச்சைமிளகாயை எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் சாப்பிட்டுக்காட்டுப் பார்ப்போம்.
ஸ்ரீநிவாசன் அமைதியாக அவர்களின் சவாலை ஏற்றுக்கொண்டான். ஒன்றன் பின் ஒன்றாக மிளகாய்கள் அவன் வாயினுள் மறைந்தன.
இவ்வாறு மிளகாய்களைச் சாப்பிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. கிடைக்கும் உணவைக் கொண்டு திருப்தியாகவும், அதற்காக நன்றியுடனும் இருக்க முடியும் என்பதை நீங்கள் நம்பவே நான் சாப்பிட்டேன்.
ஸ்ரீநிவாசன் மிகுந்த பொறுமைசாலி. ஒருநாள் அவனது நண்பர்கள் அவனுடைய பொறுமையின் எல்லையைச் சோதிக்க முடிவு செய்தனர்.
அடிப்பதை நிறுத்தியச் சிறுவர்கள் அதனால் ஏற்பட்டிருந்த பயங்கர காயங்களைக் கண்டு திகைத்து நின்றனர். இந்த நிலையில் கூட ஸ்ரீநிவாசன் அவர்களிடம் கனிவான வார்த்தைகளையே பேசினான்.
ஒரு காலத்தில் மன்னன் ஒருவன், ஒரு புத்தபிட்சுவை அநியாயமாகத் துன்புறுத்தினான். கடைசியில் மன்னன் மன்னிப்பு வேண்டினான். அந்த புத்தபிட்சு தனது பொறுமையினால் மன்னனைப் பணியச்செய்தார்.
வன்முறையினால் தனது பொறுமையை உடைக்க எண்ணியவர்களை அந்த பொறுமையினாலேயே வெற்றி கொண்டான்.

ஒருமுறை சிறுவன் ஒருவன் பட்டாம்பூச்சிகளின் இறக்கைகளைப் பிய்த்துவிட்டு அவற்றை நாயிடம் எறிந்து கொண்டிருந்தான்.



ஸ்ரீநிவாசன் சட்டென்று அந்த சிறுவனின் கையைப் பிடித்து முறுக்கினான்.




தனிப்பட்ட முறையில் ஸ்ரீநிவாசன் பொறுமையுடனும், பிறருக்குத் துன்பம் விளைவிப்பதைச் சிறிதும் விரும்பாதவனாக இருந்தாலும் அடுத்தவர்களுக்குத் துன்பம் தருபவர்களைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் எடுத்துத் தடுத்து நிறுத்தும் துணிவும் ஆற்றலும் அவனிடம் நிறைந்திருந்தன.

அருகில் இருந்த குளம் ஒன்றில் பேய்கள் நடமாட்டம் இருப்பதாக பயந்து இருட்டியபிறகு யாரும் அங்கே செல்ல மாட்டார்கள். ஆனால் ஸ்ரீநிவாசனுக்கு அவ்வாறு எவ்விதமான பயமும் இல்லை.




அவன் நண்பர்களின் சவாலை ஏற்று ஓர் அமாவாசை இரவில் தைரியமாக அக்குளத்திற்குச் சென்று கைகால்களைக் கழுவிக்கொண்டு திரும்பினான்.




ஸ்ரீநிவாசனுக்கு அந்த சிறுவயதிலேயே அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை இருந்தது.

தான் வைத்திருந்த சிறிய ஸ்படிகத்தினாலான பிள்ளையாரை, தினமும் நாள் தவறாமல், எளிய முறையில், மிகுந்த பக்தியுடன் வழிபட்டு வந்தான்.





உலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தை ஸ்ரீநிவாசன் தன் நண்பர்களிடம் அவ்வப்போது தெரிவித்துக் கொண்டே இருந்தான்.




அப்பொழுது அவனின் வயது பன்னிரெண்டு.

ஒருநாள் ராமா சாஸ்திரி தனது மகன் சரியாகப் படிப்பதில்லை எனத் தவறுதலாக அனுமானித்துக்கொண்டு அவனுக்குத் தண்டனை வழங்க முற்பட்டார். அதைத் தடுக்கக் குறுக்கிட்ட அவர்கள் வீட்டில் குடியிருந்த ஜோதிடர் சிறுவனின் கைரேகையைக் கண்டார்.




அந்த ஜோதிடர் இவர்களைச் சிருங்கேரி* மடத்தின் அதிகாரியிடம் அறிமுகப்படுத்தினார். ஸ்ரீநிவாசனின் உபநயனம் சிருங்கேரியில் நடைபெற அந்த அதிகாரி ஏற்பாடு செய்தார். *1930* ஆம் ஆண்டு மே மாதம் உபநயனம் நடைபெற்றது.



உபநயனம் முடிந்தவுடன் ஸ்ரீநிவாசனின் குடும்பத்தினர், சிருங்கேரி சாரதா பீடத்தின் பீடாதிபதியாக இருந்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகளின் தரிசனத்திற்குச் சென்றனர்.




அந்தப் பன்னிரெண்டு வயது சிறுவனிடமிருந்து வந்த விவேகம் நிறைந்த இந்தப் பதில் அந்த மஹாஞானியை ஈர்த்தது.

சம்ஸ்கிருதம் மற்றும் சாஸ்திரங்களைப் பயில்வதற்காக, ஜகத்குருவின் ஒப்புதலுடன் ஸ்ரீநிவாசன் சிருங்கேரியிலேயே தங்கிவிட்டான்.



ஸ்ரீநிவாசன் மிகுந்த கட்டுப்பாடான வாழ்க்கை முறையைக் கடைபிடித்தான் . எப்பொழுதும் படிப்பிலேயே ஈடுபட்டிருந்தான்.

ஸ்ரீநிவாசன் ஆழ்ந்த பக்தி, தீவிரமான வைராக்கியம், துறவறத்தின் பால் உள்ளார்ந்த நாட்டம், பொறுமை, பரிவு, நுண்ணிய அறிவுத்திறன் போன்ற பல அரிய உயரிய குணங்களின் சிகரமாக விளங்கியதால், தனது வாரிசாக சாரதா பீடத்தை அலங்கரிக்க ஜகத்குருவின் இயல்பானத் தேர்வாக அமைந்தான்.




*1931* ஆம் ஆண்டு மே மாதம் *22*ஆம் நாளன்று, பதிமூன்றே வயது நிரம்பிய இந்தப் பிரமச்சாரி துறவறம் ஏற்றுக்கொண்டார். ஸ்ரீநிவாசனின் குரு அவருக்குப் புதிய பெயரைச் சூட்டினார். அன்று முதல் ஸ்ரீநிவாசன் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகள் என்ற பெயரால் அறியப்பட்டார்.


* மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஓர் அழகிய ஊர்

சுவாமிகள் கடும் தவத்தை மேற்கொண்டார். சாமான்யர்களுக்கு மிகக் கடினமாக இருக்கும் சிருங்கேரி குளிர் காலங்களில் கூட இரவில் அவர் ஈரமான உடைகளை அணிந்துகொண்டு வெற்றுத் தரையில் தான் உறங்குவார்.



உணவு வகைகளின் ருசிக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் சாப்பிடும் பொழுது எல்லா உணவு வகைகளையும் ஒரு கலவையாக்கி உண்பார்.

ஓர் இரவு சுவாமிகளின் அறைக்குள் சாரை சாரையாக எறும்புகள் வந்தன. அவை கடித்து அவரின் முதுகு சிவந்தும் வீங்கியும் விட்டது. இதைப்பற்றி அவர் யாரிடமும் சொல்லக்கூட இல்லை!




அவர் எப்பொழுதும் எதைப்பற்றியும் குறை கூறியதோ அல்லது புலம்பியதோ கிடையாது. மாறாக, எல்லா நேரங்களிலும் மகிழ்ச்சியுடனேயே இருந்தார்.

சிறுவயதிலிருந்தே அவர் இயற்கையை மிகவும் நேசிப்பவராக விளங்கினார்.




அவர் ஒருமுறை ஒரு குளவி அசைவற்று இருந்த வெட்டுக்கிளி ஒன்றினை சிறிய மண்குழியினுள் வைத்து மூடுவதையும் அந்தக் குழியின் வாயிலில் ஒரு சிறிய ஓட்டை இருப்பதையும் கண்டார்.




அவர் அந்தப் பொந்தின் உள்ளே என்ன நடக்கிறது என அறிய விரும்பினார். ஆனால் அவரிடம் பூதக்கண்ணாடி இருக்கவில்லை.


அவர் உடனடியாக மாற்று ஒன்றை யோசித்து வடிவமைத்தார். ஓர் இலையில் சிறிய துளையிட்டு அதில் மழைத்துளி ஒன்றை வைத்து...




....அதைக்கொண்டு அந்தப் பொந்தினுள் இருந்தவற்றை ஆராய்ந்தார்.




இத்தகு ஆர்வமும், புத்திகூர்மையும் அவரிடம் இயல்பாகவே இருந்தன.


சுவாமிகள் துறவறம் ஏற்றுக்கொண்ட நாளன்று இரவு தொடங்கி, தொடர்ந்து ஏழு இரவுகள், கனவில் சிவபெருமானின் தரிசனம் பெற்றார்.
அந்தத் தொடர் கனவுகளில் சிவபெருமான் பல யோகசனங்கள், பிராணாயாமம் மற்றும் யோக கிரியைகளைத் தானே செய்து காண்பித்து, அதன் மூலம் சுவாமிகளுக்குக் கற்றுக்கொடுத்தார்.
அவரது இயல்பானத் திறமையினாலும், இடைவிடாப் பயிற்சியினாலும் மிக விரைவில் யோக பயிற்சிகளைக் கற்றுத் தேர்ந்து அவற்றில் வல்லுனரானார்.
சில வாரங்களுக்குப் பிறகு சுவாமிகளின் குருநாதர் அவருக்கு நரசிம்ம மந்திரத்தை உபதேசித்த பொழுது, சுவாமிகள் தனது இதயக்கமலத்தில் நரசிம்மரின் உருவத்தைக் கண்டார். நரசிம்மருக்கு மனத்தினால் விரிவான வழிபாடுகளையும் செய்தார்.
தனது குருவை தொடர்ந்து சுவாமிகள் மந்திரத்தை கூறியபொழுது நரசிம்மரின் உருவம் அவர் மனதில் தோன்றி மிகத் தெளிவாக ஒளிர்வதை உணர்ந்தார்.
இந்த அனுபவத்திற்குப் பின் அவர் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் தான் செய்யும் அனைத்து விஷயங்களையும் நரசிம்மருக்குக் காணிக்கையாக்கினார்.
அவர் குளிக்கும் பொழுது நரசிம்மருக்கு அபிஷேகம் செய்வது போல் உணர்ந்தார்...
அவர் சாப்பிடும் பொழுது நரசிம்மருக்கு உணவு அளிப்பது போன்று உணர்ந்தார்...
அவர் படிக்கும் பொழுது, உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருக்கும் நரசிம்மருக்காக அதை வாசிப்பது போல் உணர்ந்தார்.....
அவர் நடக்கும் பொழுது, தன் உள்ளிருக்கும் நரசிம்மரை உலாவ அழைத்துச் செல்வதாக உணர்ந்தார்...
சில மாதங்களிலேயே இந்த கர்ம யோகம் அவருக்கு இயல்பாகிவிட்டது.


சுவாமிகளின் பதினாறாவது வயதில் அவரின் குரு அவருக்குத் தெய்வ வடிவங்களின் மீது தியானம் செய்யும் முறையைக் கற்றுக்கொடுத்தார்.




அவர் மனது தியானம் செய்ய ஆரம்பித்த முதலே, அலைபாய்வது போன்ற தடங்கல்கள் எதுவும் இல்லாமல், மிக எளிதாக ஒருமுகப்பட்டது. மேலும் தியானம் செய்யும் பொழுது அவர் தனது உடல், சுற்றுப்புறம் மற்றும் கால அளவு பற்றிய உணர்வுகளை இழந்தார்.



அவரால் பல விதமான தெய்வ வடிவங்களின் மீதும் மிகவும் எளிதாகத் தியானம் செய்ய முடிந்தது.



அவர் தியானத்தின் நுட்பங்கள் பலவற்றைக் கையாண்டு அவற்றின் கரை கண்டவராய் விளங்கினார்.



அவர் தான் மனதில் தியானித்துக் கொண்டிருக்கும் தெய்வ வடிவங்களின் பிரகாசம், அவற்றின் பின்னணியில் தெரியும் ஒளியின் நிறம் மற்றும் அளவு முதலியவற்றைத் தேவைக்கேற்றார்போல் துளியும் சிரமமின்றி மாற்றிக்கொள்வார்.


பொதுவாக ஒரு தெய்வ வடிவத்தைத் தியானிக்கும் பொழுது எப்பகுதியில் கவனம் குறிப்பாக இருக்கிறதோ அப்பகுதி மற்ற பகுதிகளைக் காட்டிலும் மிக நன்றாகத் தெரியும். ஆனால் சுவாமிகள் தியானிக்கப்படும் தெய்வ வடிவத்தின் முழுத் தோற்றத்தையும் நன்கு தெளிவாகத் தனது இதயத்தில் கண்டார்.




அவர் தியானம் செய்யும் தெய்வ வடிவங்களின் ஒரு பகுதியை மட்டுமே மனதில் இருத்தி அதில் முழு கவனத்தைச் செலுத்தி இருந்த போதிலும், உதாரணமாகப் பாதங்களில் மட்டுமே கவனம் செலுத்தியிருப்பினும், அப்பகுதி எந்த தெய்வ வடிவத்தினுடையது என்பதையும் நினைவில் கொள்ளும் திறனைப் பெற்றார்.



ஒரு மந்திரத்தைத் தியான நேரம் முழுவதும் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினால் அச்சமயத்தின் போது தனது தியானத்தின் ஆழத்தைச் சற்றே குறைவாக அமைத்துக்கொள்ளவும் அவரால் இயலும்.




சுவாமிகள் தினமும் மூன்று முறை தியானம் செய்தார். மாலை வேளைகளில் அவர் அருகில் இருக்கும் ஒரு குன்றின் மீது அமைந்துள்ள காலபைரவர் கோயிலில் தியானம் செய்தார். இவ்வாறு ஓராண்டு காலம் கழிந்தது.



ஒருநாள் மாலை அவர் பாலாம்பிகையின் ரூபத்தை தியானித்தார்.

திடீரென்று அவர் மனம் அம்பாளின் பாதங்களிலேயே நிலைத்து விட்டது. அம்பாளின் பாதங்களை உயிர்ப்பொலிவுடன் கண்டார். அம்பாளின் வடிவத்தை அல்லாமல் அம்பாளையேக் கண்டார் !



இதுவே சுவாமிகளின் முதல் சவிகல்ப சமாதி* அனுபவமாகும்.

ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் அந்த நிலையிலேயே இருந்தபின் சுவாமிகள் கண்களைத் திறந்தார். ஆலயத்தினுள் அவருக்கு எதிரே அம்பாள் இருப்பதை நிதர்சனமாகக் கண்டார்.



சற்றே முன் சென்று, அம்பாளின் பாதகமலங்களை அவரது கைகளால் தொட்டு வணங்கினார்.



இந்த அனுபவத்திற்குப் பிறகு, அவர் தான் எந்த தெய்வ ரூபத்தை விரும்பினாரோ அதையே பொருளாகக் கொண்டு சவிகல்ப சமாதியை எளிதாக அடைந்தார்.

இதைத் தொடர்ந்து சில மாதங்களில் சுவாமிகள் குண்டலினி யோகத்தின்# அனுபவத்தைப் பெற்றார்.



அதைத் தொடர்ந்து அவர் சவிகல்ப சமாதியில் மூழ்கினார்.

ஒரு நாள் மாலை தனது இதயத் தாமரையில் சிவபெருமானை கற்பனை செய்து கொண்டு அந்த உருவத்தின் மீது தியானத்தைத் துவங்கினார். சவிகல்ப சமாதியில் மூழ்கிய சுவாமிகள் சுமார் ஒன்றரை மணி நேரம் அந்நிலையிலேயே இருந்தார்.




அவர் கண்களைத் திறந்த பொழுது, இறைவன் உள்ளிருந்து வெளிவந்து தனது தோற்றத்தைப் பெரிதாக்கிக்கொண்டார். அப்பொழுது சுவாமிகள் சிவபெருமானை மிகத் தெளிவாகத் தனக்கு முன்னால் கண்டார்.



*இந்த தியான நிலையில் தியானிக்கப்படும் பொருள் தெளிவாகவும் தொடர்ந்தும் விளங்கிக் கொண்டிருக்கும். இந்நிலை யோகத்தின் உச்சத்தை எட்டுவதற்கு முந்தைய நிலையாகும்.


#குண்டலினி சக்தி ஆறு சக்கரங்கள் வழியாக மேலெழும்பி தலையில் உள்ள ஏழாவது சக்கரத்தை அடையும்.




* அனைத்து நாம ரூப பேதங்களும் நீங்கப்பெற்று பரதத்துவம் மட்டுமே ஒளிரும் தியான நிலை, யோகத்தின் மிக உயரிய நிலை

\# இவ்வுலகில் இருக்கும் பொழுதே பந்தங்களில் இருந்து விடுபட்டு எப்பொழுதும் பரதத்துவத்தில் நிலைபெற்றிருக்கும் ஞான நிலை

செயல்களில் ஈடுபடவேண்டிய அவசியத்தை அவர் முற்றிலுமாகக் கடந்திருந்த போதிலும், இந்த உலகத்தின் நன்மைக்காக அவர் தனது அனைத்துக் கடமைகளையும் முழுமையாக மேற்கொண்டார்.



முதலில் அவர் வேதம், வேதாந்தம், தர்க்கம், யோக சாஸ்திரங்கள் போன்றவற்றை முறையாக, மிகுந்த கவனத்துடன் கற்று அவற்றில் பண்டிதர் ஆனார்.

அவர் மிகுந்த பக்தியுடன் தனது குருவுக்கு பணிவிடைகள் செய்தார். முக்கியமாக அவரது குரு உடல் நலகுறைவுற்று இருந்த போது மிகுந்த அக்கறையுடன் தானே அவரை கவனித்துக் கொண்டார்.



சுவாமிகளின் குருவோ இவர் மீது அளவு கடந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அதற்குச் சான்று அவர் சுவாமிகளின் மீது எழுதிய ஸ்லோகங்களே ஆகும்.

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த ராஜேந்திர பிரசாத் அவர்கள் சிருங்கேரி வந்தார். அவர் சாரதாம்பாள் ஆலயத்தில் இரண்டு ஜககுருக்களையும் சந்தித்தார்.



அவர் சுவாமிகளைக் கண்டு வியந்து போற்றினார்.

*1954* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சுவாமிகளின் குருநாதர் தனது தேகத்தைத் துறந்தார். சிருங்கேரி சாரதா பீடத்தின் *35*வது பீடாதிபதியாக சுவாமிகள் பொறுப்பேற்றார்.



மக்களின் நன்மைக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் பல்வேறு துறைகளில் முன்னோடித் திட்டங்களை வகுத்து அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்தார் சுவாமிகள்.



சுவாமிகள் ஒரு தீவிரமான சுற்றுச்சூழல் ஆர்வலர். அவர் சிருங்கேரியைச் சுற்றியுள்ள பல மலைகளில் காடுகளை உருவாக்கி அதன்மூலம் மேற்குத் தொடர்ச்சி மலையின் அந்தப் பகுதியின் சூழலையே வளப்படுத்தினார்.




அவர் இந்தியாவின் பல பகுதிகளில் கோயில்களை நிர்மாணித்துக் கும்பாபிஷேகம் செய்துவைத்தார். மிகவும் பின்தங்கிய கிராமங்களில் கூட கோயில் வழிபாட்டு முறைக்குப் புத்துயிர் அளித்தார்.




அவர் சிருங்கேரியில், அங்கு வரும் யாத்ரீகர்கள் தங்குவதற்காகப் பல புதிய விடுதிகளைக் கட்டினார். மேலும் நாட்டின் பல பகுதிகளிலும் கல்யாண மண்டபங்கள் மற்றும் தர்ம சத்திரங்களையும் ஏற்படுத்தினார்.




அவரின் முயற்சியால் சிருங்கேரியின் முதல் தென்னந்தோப்பு உருவானது. விவசாயத்தில் பல்வேறு நவீன முறைகளை அவர் அறிமுகப்படுத்தினார்.



அவர் பல்வேறு இடங்களில் வேதபாடசாலைகளை நிறுவினார். அங்கு பயிலும் மாணவர்களின் படிப்பிலும், நல்வாழ்விலும் தனிப்பட்ட அக்கறை காட்டினார்.





சிருங்கேரியில் முதன்முதலாக பெண்களுக்கான பள்ளியையும், பெங்களூரில் ஞானோதயா பள்ளியையும் நிறுவினார். கேரள மாநிலத்தின், காலடி என்னும் இடத்தில் உள்ள ஸ்ரீ சங்கரா கல்லூரியின் காப்பாளராக இருந்தார். அவர் பல நூலகங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் ஆரம்பித்தார்.


முன்னதாக சிருங்கேரியும் அதனைச் சுற்றி இருந்த கிராமங்களும் மருத்துவ வசதி இன்றி இருந்தன. இந்தக் குறைபாட்டை சுவாமிகள் சரிசெய்தார். 1980 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சாரதா தன்வந்தரி இலவச பல்துறை சிறப்பு மருத்துவமனையை சிருங்கேரியில் தொடங்கினார்.



சிருங்கேரி நகர்புறத்திலிருந்து நெடுந்தொலைவில் இருந்த போதிலும், மருத்துவமனையின் எல்லாப் பிரிவுகளுக்கும் அந்தப் பிரிவில் முதன்மையாக விளங்கும் மருத்துவர்களையே பணிக்கு அமர்த்தினார். மேலும் அனைத்து நவீன மருத்துவ சாதனங்களையும் ஆராய்ச்சி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.



பொருள் சிறியதோ பெரியதோ, அதை வீண் செய்வதை சுவாமிகள் சிறிதும் விரும்பாதவர். ஒருமுறை அவர் ஓர் இடத்தில் மேலிருக்கும் தண்ணீர் தொட்டியிலிருந்து அடிக்கடி தண்ணீர் வழிந்து வீணாவதைக் கவனித்தார்.




அந்த இடத்தில் ஒரு தென்னங்கன்றை நடச்செய்து வழிந்தோடும் தண்ணீரைப் பயனுள்ளதாக மாற்ற ஒரு வழி வகுத்தார்.



சுவாமிகள் முப்பது வருடகாலம் யாத்திரையில் செலவிட்டார். அப்பொழுது அவர் மூன்று முறை இந்தியா முழுவதும் சென்றார். கிராமம் கிராமமாக யாத்திரை மேற்கொண்டு பல கோடி மக்களின் வாழ்கையில் பல உன்னதமான மாறுதல்களை எண்ணற்ற வகைகளில் உண்டாக்கினார்.




சில இடங்களில் அவர் அரண்மனையில் தங்க வைக்கப்பட்டார்......




....வேறு சில இடங்களில் மக்களால் அவர் தங்குவதற்கு மிகவும் அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தர இயன்றது. ஆனால் இவற்றை எல்லாம் அவர் ஒருபோதும் பொருட்படுத்தியதே இல்லை.




பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சென்னை மற்றும் ஹைதராபாத்திற்கு விஜயம் செய்த சிருங்கேரி ஜகத்குரு என்ற பெருமையும், மும்பை, டெல்லி மற்றும் கொல்கத்தா நகரங்களுக்கு விஜயம் செய்த முதல் சிருங்கேரி ஜகத்குரு என்ற பெருமையும் சுவாமிகளுக்கே உண்டு.



*1967ல் நேபாள தேசத்திற்கு யாத்திரை மேற்கொண்ட சுவாமிகள் மிக்க மரியாதையுடனும் பக்தியுடனும் வரவேற்கப்பட்டார். ஆதி சங்கரருக்குப் பிறகு அங்கே விஜயம் செய்த முதல் ஜகத்குரு சங்கராசார்யார் இவரே ஆவார்.*



*இந்த அரிய நிகழ்வைப் போற்றும் வகையில் நேபாள நாட்டின் அரசாங்கம், பசுபதிநாதர் கோயில் வளாகத்தில் கல்வெட்டு ஒன்றினைப் பதித்தனர்.*

*அவர் முதன்முறையாக 1967ல் காசிக்கு யாத்திரை மேற்கொண்டபொழுது, நாட்டின் மிகவும் கற்றறிந்த அறிஞர்களான காசியின் பண்டிதர்கள் கூடியிருந்தச் சபையில் வேதத்தின் நுட்பங்களை எடுத்துரைத்தார். இவரைப் பற்றி அதுவரை ஒன்றுமே தெரியாதிருந்த அந்தப் பண்டிதர்கள், இவரின் சாஸ்திர அறிவின் திறனையும், நுட்பங்களை எடுத்துரைக்கும் பாங்கினையும் கண்டு வாயடைத்துப் போயினர்.*




*1960ல் அமெரிக்காவின் இந்தியத் தூதராக இருந்த எல்ஸ்வோர்த் பங்கர், சுவாமிகளைச் சந்தித்து அவரிடம் நவீன யுகத்தின் பிரச்சனைகளைப் பற்றி பல்வேறு கேள்விகளைக் கேட்டார்.*




*பிரச்சனைகளின் ஆணி வேரையே களையும் வகையில் சுவாமிகள் அளித்த நடைமுறை படுத்தக்கூடிய தீர்வுகளால் வெகுவாய் ஈர்க்கப்பட்டவராகவும், மற்றும் அவரின் அருளுக்குப் பாத்திரமான சந்தோஷத்துடனும் பங்கர் சென்றார்.*

*ஆதி சங்கரர் காலத்திற்குப் பிறகு, நான்கு ஆம்னாய பீடங்களின் ஜகத்குருக்களும் சந்தித்த, சரித்திர புகழ் வாய்ந்த நிகழ்ச்சியை சுவாமிகள் ஏற்பாடு செய்திருந்தார். அந்த நிகழ்ச்சியில் நான்கு ஜகத்குருக்களும் இணைந்து உலக அமைதிக்காக அறிக்கை வெளியிட்டனர்.*



அரசாங்கத் தலைவர்கள், மந்திரிகள், மன்னர்கள் மற்றும் பல முக்கியப் பிரமுகர்களும் சுவாமிகளுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் வழங்கினர். அவர்கள் சுவாமிகளின் ஆசிகளை வேண்டி பலமுறை அவரை நாடி வந்தனர்.




மக்களின் பொருளாதார நிலை, ஜாதி, மதம், இனம் போன்ற பாகுபாடுகளைச் சுவாமிகள் என்றுமே கருத்தில் கொண்டதில்லை. அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவரை தரிசிப்பதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டுவந்தனர். தங்களுடைய துன்பங்களிலிருந்து விடுபட அவருடைய ஆலோசனைகளையும் ஆசிகளையும் வேண்டிப்பெற்றனர். தங்களுடைய சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அவரை நாடி வந்தனர்.



ஒருமுறை, ஒரு முஸ்லிம் அன்பர் தனக்குக் குழந்தை பிறக்கவேண்டி ஆசிகள் பெறுவதற்காக சுவாமிகளை தரிசிக்க வந்திருந்தார். அந்த அன்பர் எதுவும் சொல்வதற்கு முன்னரே...




விரைவிலேயே அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவர் மிகுந்த சந்தோஷத்துடன் சிருங்கேரி சென்று சுவாமிகளிடம் தகவலை தெரிவித்தார்.




மக்கள் தாங்கள் பின்பற்றும் மதத்தின் கோட்பாடுகளைத் தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்பது சுவாமிகளின் நிலைப்பாடு.


ஒருமுறை அலைமோதும் கூட்டத்திற்கு நடுவில் ஊனமுற்றவர் ஒருவர் சுவாமிகளின் தரிசனத்திற்காக வந்தார். மிகுந்த முயற்சி செய்தும் அவரால் கூட்டத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.




வெகு தொலைவிலிருந்தே அவரை சுவாமிகள் கண்டார்.




சுவாமிகள் உடனடியாக எழுந்துப் படிகளில் இறங்கிச் சென்று அந்த ஊனமுற்றவரை அன்புடன் நலம் விசாரித்து ஆசிகளும் வழங்கினார்.



என்றுமே ஊனமுற்றவர்களுக்காக அவர் உள்ளத்தில் தனியிடம் இருந்தது.

ஒருமுறை நெடுஞ்சாலை ஒன்றில் பாதி கவிழ்ந்து இருந்த கார் ஒன்றினை சுவாமிகள் கண்டார். அவ்வழியே சென்ற பல வாகன ஓட்டிகள் அதைப் பற்றி கவனம் ஏதும் செலுத்தாமல் கடந்து சென்று கொண்டிருந்தனர். சுவாமிகள் தான் சென்று கொண்டிருந்த காரினை நிறுத்தச்சொல்லி கவிழ்ந்து இருந்த காரினை நோக்கி விரைந்தார்.




அந்தக் காரினுள் ஒருவர் பலத்தக் காயங்களுடன் மயங்கிய நிலையில்,ஆனால் உயிருடன் இருந்தார். உடனடியாக சுவாமிகள் மடத்தின் வண்டி ஒன்றினை அருகில் இருந்த நகரத்திலிருந்து ஆம்புலன்ஸ் வண்டியை அழைத்து வர அனுப்பிவைத்தார்.

காரினுள்ளே மாட்டிக் கொண்டிருந்தவரை வெளியே எடுக்க அந்தக் காரினை நிமிர்த்த வேண்டும் என்பதை சுவாமிகள் கண்டறிந்தார். உள்ளே இருப்பவருக்குக் கேடு ஏதும் ஏற்படாமல் அவ்வாறு செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின் மற்றவர்களுடன் அவரும் சேர்ந்து காரை நிமிர்த்தினார்.




கூர்ந்து ஆய்ந்த பின் உள்ளே இருப்பவரை மருத்துவ உதவியாளர்கள் வருவதற்கு முன்னமே பத்திரமாக வெளியே எடுக்க முடியும் என்பதைத் தீர்மானித்து, அவரை ஜாக்கிரதையாக அந்த காரிலிருந்து வெளியே எடுத்தார்.




ஒரு விசாலமான வண்டியில் அந்த அடிபட்டவரை ஏற்றி ஆம்புலன்ஸ் வரும் திசை நோக்கி அனுப்பிவைத்தார்.





அவரின் துரிதமான மற்றும் ஜாக்கிரதையான நடவடிக்கைகளால் அந்த விபத்தில் மாட்டிக் கொண்டவருக்கு விரைவாக மருத்துவ உதவி கிடைக்கப் பெற்றது. அந்த நபர் உயிர்பிழைத்து குணமடைந்தார்.

ஒரு பகுதி மூன்று வருடங்களாக வறட்சியில் வாடிக்கொண்டு இருந்தது. அச்சமயத்தில் சுவாமிகள் அப்பகுதியில் பல இடங்களில் யாத்திரை மேற்கொண்டார்.




ஒருமுறை பெங்களூரு சங்கர மடத்தில், மடத்தின் முன்பகுதியில் இருக்கும் திறந்த வெளியில், பெரிய விழா ஒன்று ஏற்பாடாகியிருந்தது. திடீரென்று மழை மேகங்கள் சூழ்ந்து கொண்டு எந்நேரமும் மழை கொட்டத் துவங்கும், என்ற நிலை ஏற்பட்டது. விழாவை ஏற்பாடு செய்தவர்களும் அதில் கலந்து கொள்ள வந்தவர்களும் மிகவும் கவலையுற்றனர். அச்சமயம் சுவாமிகள் குவித்த கைகளுடன் வானத்தை நோக்கியதை அங்கு கூடி இருந்தவர்கள் கண்டனர். சில கணங்களில்.....




சுவாமிகள் தான் ஆற்றிய பல்லாயிரக்கணக்கானச் சொற்பொழிவுகளின் மூலம், துறவு வாழ்கையில் இருப்பவர்களுக்கே பாரம்பரிய சாஸ்திர முறைப்படியிலான ஆன்மீக சாதனைகள் உரித்தானது என்ற எண்ணத்தை மாற்றி, ஆன்மீகத்தை எவ்வாறு நடைமுறை வாழ்வில் கடைப்பிடிப்பது என்பதை விளக்கி, சாதாரண மனிதனும் அதனைப் பின்பற்றும்படிச் செய்தார்.




மிகச் சரளமாகத் தமிழ், கன்னடம், தெலுங்கு மற்றும் ஹிந்தியில் பேசும் ஆற்றல் பெற்றதன் காரணமாக சுவாமிகள் நாட்டின் பெரும்பாலான பகுதி மக்களுடனும் நேரடியாக அவர்களின் மொழியேலேயே உரையாட முடிந்தது.

1970ன் முற்பகுதியில் ஓரிடத்தில் சுவாமிகள் உபன்யாசம் செய்வதாக ஏற்பாடாகி இருந்தது....




வெளியில் இருக்கும் ஒலிப்பெருக்கிகளை சுலபமாக துண்டிக்க இயலும் என்பதை அறிந்துகொண்ட சுவாமிகள் அந்த விழாக் குழுவினரிடம் அவற்றை அகற்றிவிடுமாறு கூறினார்.

* கர்மயோகம் எனப்படுவது ஒரு செயலை செய்யும் பொழுது பற்றுதலின்றி, இறைவனுக்கு அர்பணமாக அதனை மேற்கொள்ளும் ஒரு ஆன்மீகச் சாதனை.




இந்தியாவில் ஒலிமாசு பிரச்னை பற்றிய விழிப்புணர்வு கூட இல்லாத காலம் அது.

அவர் உலகத்தின் வளமைக்காகவும், அமைதிக்காகவும் பல்வேறு இடங்களில் யாகங்களை நடத்தினார்.




அவர் நாடு முழுவதும் மேற்கொண்ட பல்வேறு யாத்திரைகளின் போது, அழைப்பின் பேரில் இந்திய ஆயுதப்படையினரிடம் பல சந்தர்ப்பங்களில் உரையாற்றியுள்ளார்.




போர்காலத்தில் மடத்தின் சார்பில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு அவர் தாராளமாகப் பொருள் உதவி வழங்கினார்.

அவர் தீவிரமான நாட்டுப்பற்று உடையவர்.




இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளின் வரலாறுகளைப் படிக்கும் பொழுது அவர் உள்ளம் உருகி கண்ணீர் பெருக்குவார்.


அவர் அஹிம்சையைத் தீவிரமாக பின்பற்றுபவர். வன்முறையை அறவே வெறுத்தார். பசுவதையை எதிர்த்து தேசமெங்கும் நடந்த போராட்டங்கள் வன்முறையாக மாறியபொழுது....



அவர் அடுத்தவருக்கு மட்டும் உபதேசம் செய்பவரல்ல. அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். சிருங்கேரியில் ஒரு பெரிய கோசாலையை அமைத்து அதில் நூற்றுக்கும் மேலான பசுக்களை மிகவும் அன்புடன் பராமரித்து வந்தார்.



பல்வேறு மத அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களும் சுவாமிகளிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். பல சந்தர்ப்பங்களில் இவரின் அறிவுரையையும் ஆசிகளையும் நாடி அவர்கள் வந்துள்ளனர்.



சுவாமிகள் பாரம்பரியக் கல்வியில் மட்டுமின்றி விவசாயம், தோட்டக்கலை, பொறியியல், நிழற்படக்கலை, மின்னணுவியல் போன்ற பலதரப்பட்ட படிப்புத் துறைகளிலும் ஆழ்ந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.



அவர் பரந்த நோக்குடையவர். தன்னுடைய கருத்துக்கு மாறுபட்டக் கருத்து கொண்டவராயினும் அவர்களையும் பாராட்டும் பாங்குடையவர். அவருடைய இந்த உண்மையான அன்பு பலரையும் அவர்பால் ஈர்த்தது.



விஞ்ஞான மேதையும், மதநம்பிக்கை அற்றவருமான ஜி.டி.நாயுடு, சுவாமிகளிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அவர் சுவாமிகளின் பெயரால் ஒரு தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனமும் மற்றும் ஒரு மண்டபமும் அமைத்தார்.

சுவாமிகளுக்கு நீந்துவது மிகவும் பிடிக்கும். எப்பொழுதும் உற்சாகமாக இருக்கும் அவர் நீந்துவதற்குக் கிடைத்த எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் நழுவ விட மாட்டார். நீச்சல் நிபுணரான அவர் எந்தவொரு நதியையோ கடலையோ விட்டுவைத்ததேயில்லை!



மேற்கொண்ட ஒவ்வொரு காரியத்திலும் சுவாமிகள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். அவர் சிருங்கேரியில் துங்கை நதியில் ஒரு பாலம் அமைக்க எண்ணினார். அதைப் பற்றி கலந்தாலோசிக்க ஒரு பன்னாட்டு பொறியியல் நிறுவனத்துக்கு அழைப்பு விடுத்தார்.




உலகில் உள்ள பல்வேறு பாலங்களின் படங்கள் மற்றும் அவற்றின் விவரங்களுடன் தான் தயார் செய்து வைத்திருந்த ஒரு புத்தகத்தை அவர்களிடம் காண்பித்தார் சுவாமிகள். மேலும் சிருங்கேரியில் அமைக்க இருக்கும் பாலத்திற்கு ஏற்ற அமைப்பு எதுவாக இருக்கும் என்பதைப் பற்றியும் அவர்களுடன் கலந்தாலோசித்தார்.


அவரின் ஆழ்ந்த அறிவைக் கண்ட அந்த உயர் மட்டக் குழுவினர் மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர். அவர்கள் செல்லும் பொழுது...




பொறுப்பான குடிமகனாக இருக்க வேண்டும் என்ற உணர்வு பலமுறை சுவாமிகளின் செயல்களில் பளிச்சிட்டது. ஒருமுறை ஒரு சாலையின் குறுக்கே மரம் ஒன்று விழுந்து கிடந்தது. வாகன ஓட்டிகள் அந்த மரத்தைச் சுற்றிச் செல்ல வேண்டியிருந்தது. அவரது கார் அந்த இடத்தைக் கடந்து சென்ற போது...




அவரின் வழிகாட்டுதலுடனும் உதவியுடனும் மடத்தின் ஊழியர்கள் அந்த மரத்தை அகற்றினர்.




பொது மக்களுக்கு இடையூறாக இருந்த அந்த மரத்தை அகற்றிய பின்னரே அவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

அடுத்தவர்களின் வசதிக்காகத் தனது வேலைகளை மாற்றி அமைத்துக்கொள்ள சுவாமிகள் ஒருபோதும் தயங்கியதே இல்லை. ஒருமுறை வடஇந்தியாவில் இருந்து ஒரு வயதானப் பெண்மணி சிருங்கேரி வந்திருந்தார்.




அந்தப் பயணத்தை மேற்கொள்ளவே அந்தப் பெண்மணி பல நாட்களாகப் பணத்தைச் சேமிக்க வேண்டி இருந்தது. இரண்டு நாட்கள் மட்டுமே அந்தப் பெண்மணியால் தங்க இயன்றது.

நாள் முழுவதும் ஓய்வின்றி வேலைகள் இருந்தாலும்,சுவாமிகள் அந்தப் பக்தரின் மீது கொண்ட கருணையினால், தனது வேலைகளை மாற்றி அமைத்துக்கொண்டு, தான் பொதுமக்களுக்குத் தரிசனம் அளிக்கும் நேரத்தை நீட்டித்துக்கொண்டார்.




அனைத்து ஜீவராசிகளிடமும் சுவாமிகள் மிகுந்த கருணையுடன் இருந்தார். ஒருமுறை பக்தர் ஒருவர் திறந்த காயங்களை மிக விரைவில் குணப்படுத்தும் அரிதான மூலிகை மருந்து ஒன்றினை அவரிடம் கொடுத்தார்.





சில நாட்கள் கழித்து, மிகுந்த வலியினால் முனகியபடி நாய் ஒன்று பாதையில் படுத்திருப்பதை சுவாமிகள் கண்டார். அந்த நாய்க்கு மிகவும் மோசமான காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஒரு கணம் கூட தயங்காமல்.....




காயங்கள் நன்றாக சுத்தப்படுத்தப்பட்டு அந்த மருந்து தடவப்படுவதை அவர் உறுதிசெய்து கொண்டார். தொடர்ந்து சில நாட்கள் அந்த நாய்க்கு இந்தச் சிகிச்சை அளிக்கப்பட்டது. காயங்கள் மிக விரைவாக குணமடைந்து அந்த நாய் தனது இயல்பான நிலைக்குத் திரும்பியது.




ஒருமுறை பக்தர் ஒருவர் அவரிடம் ஒரு கேள்வியுடன் வந்தார். அதைத் தொடர்ந்து ஒரு சுவாரசியமான உரையாடல் நடந்தது.





"உதாரணத்திற்கு, யாரோ உன்னைத் திட்டுவதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது உனக்கு கோபம் எழும்பொழுது நீ இவ்வாறு நினைக்கலாம் ......"





இந்த மனிதர் இல்லை, எனது கோபமே என் எதிரி. கோபம் எனது மனதை நிலைதடுமாறச் செய்து, பகுத்தறியும் திறனை அழித்து, செய்யக் கூடாத செயல்களைச் செய்யத் தூண்டி மன நிம்மதியை போக்கிவிடுவதுடன் எனது உடல் நலத்தையும் பாதிக்கிறது.
நான் கோபத்தை விட்டுவிட்டால் மற்றவர்கள் அதை அவர்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள மாட்டார்களா?
தேவைப்பட்டால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கோபப்படுவது போல் பாசாங்கு செய்யலாம். ஆனால் மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படுத்த வேண்டும் போன்ற எண்ணங்கள் ஏதுமின்றி மனம் அமைதியாக இருக்க வேண்டும்.
மக்களை எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றி ஆன்மீக சிந்தனைப் பொதிந்த ஓர் அரிய குறிப்பை சுவாமிகள் பகிர்ந்து கொண்டார்.
நம்மை யாரேனும் காரணமே இன்றிக் குறை கூறும்பொழுது, “மற்றவர்களை சந்தோஷப்படுத்துவது” என்பது இறைவனை வழிபடுவதற்குச் சமமாகும். என்னை குறை கூறுவதினால் இந்த மனிதர் சந்தோஷத்தை அடைகிறார். எனவே நான் இறைவனை வழிபட இவர் எனக்குச் சுலபமாக வழிவகுத்துத் தருகிறார்!
அதன் பிறகு சுவாமிகள் தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வுடன் இவ்வாறு குறிப்பிட்டார்.....
“அடுத்தவர்களை சந்தோஷப்படுத்துவது” என்பதைத் தவறாக அர்த்தம்செய்து கொண்டு, முறையற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு உதவி செய்து விட்டு, அதை அவர்களின் சந்தோஷத்திற்காகவே நான் செய்தேன், எனவே அது இறைவனின் வழிபாடிற்கு ஒப்பாகும் என்று சொல்லக்கூடாது!
சுவாமிகளின் கருணை மட்டுமே பலரையும் அவர்களது மிகப் பெரிய பிரச்சனைகளில் இருந்து விடுவிக்க போதுமானதாக இருந்தது என்பதற்குப் பல நிகழ்வுகள் சான்றாகும். ஒருமுறை பக்தர் ஒருவரின் தாயாருக்கு உடல் நிலை குன்றியது. பல மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு ....
உங்கள் அம்மா முதுகுத்தண்டுப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் பிழைப்பது மிகவும் கடினம்.
அச்சமயம் அருகில் இருந்த நகரத்தில் சுவாமிகள் யாத்திரை மேற்கொண்டிருந்தார். மிகுந்த துக்கம் மற்றும் அதிர்ச்சியில் இருந்த இந்த பக்தர் அவரைக் கண்டு இந்தச் செய்தியை தெரிவிக்க விரைந்து சென்றார்.
உனது அம்மாவிற்குப் புற்றுநோய் இல்லை. இன்னொரு முறை பரிசோதனைகளைச் செய்யச் சொல். கவலைப்பட வேண்டாம்.

சுவாமிகளின் சொல்படி மீண்டும் அனைத்துப் பரிசோதனைகளையும் அந்த பக்தர் செய்தார். முடிவுகளைக் கண்ட மருத்துவருக்கோ அளவில்லா ஆச்சரியம், பக்தருக்கோ மிகுந்த மகிழ்ச்சி.




ஒரு கோயில் அர்ச்சகருக்குத் திடீரென்று அவரது வேலையை விட வேண்டி வந்தது. வேறு இடத்தில் வேலை எதுவும் கிடைக்காதக் காரணத்தினால் அவரின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்தது. சுவாமிகளைச் சந்தித்து அவர் தனது பிரச்சனைகளைப் பற்றி கூறினார்.







சுவாமிகளின் கருணையினால், சற்றும் எதிர்பாராத பலரும் அவர்களாகவே முன் வந்து நன்கொடைகள் வழங்கினர். அதன் மூலம் விரைவிலேயே கோயில் நிர்மாணிக்கப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் சுவாமிகள் மக்களின் கஷ்டங்களைத் தீர்க்க அவர்களுக்குக் குறிப்பிட்ட சில பரிகாரங்களையோ அல்லது மந்திரங்களையோ பரிந்துரைப்பார். ஒருநாள் மிகுந்த கலக்கத்துடன் ஒரு பக்தர் சுவாமிகளை காண வந்தார்.




அந்த இளைஞன் சுவாமிகள் கூறியபடியே மனமார்ந்த நம்பிக்கையுடன் செய்தான். மருத்துவர்களின் ஆச்சரியத்திற்கு இடையே, அவன் உடல்நிலைப் படிப்படியாக மேம்பட்டது.

இளம் பக்தன் ஒருவன் தான் தேர்வுக்குப் படிக்கவில்லை என்றும், சுவாமிகளின் ஆசிகளையே நம்பியுள்ளதாகவும் கடிதம் எழுதி இருந்தான். முதலில் சுவாமிகள் வேடிக்கையாக......




அதைத் தொடர்ந்து அவர் ஒருவனின் மனப்பான்மை எவ்வாறு இருக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.



சுவாமிகள் தனது தார்மீகக் கடமைகளைத் தனது உடல் நிலையின் காரணத்தினாலோ அல்லது நாள் முழுவதும் நிறைந்திருக்கும் ஓயாத வேலையின் காரணத்தினாலோ செய்யாமல் இருந்தார் என்பதே கிடையாது.



சுவாமிகள் நிகழ்த்தும் இரவு பூஜையைக் காண்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதும். ஒரு சந்தர்ப்பத்தில் பூஜைக்காக பல வண்ண ரோஜா மலர்கள் வைக்கப்பட்டு இருந்தன.




வழக்கம்போல் சுவாமிகள் ஒவ்வொரு பூவாக எடுத்து அர்ச்சனை செய்தார்.

அவர் அர்ச்சித்து முடித்தவுடன் ஒரே வண்ணம் கொண்ட ரோஜா மலர்கள் அருகருகே அமைந்து இறைவனுக்கு ஒரு மாலையைப் போல் காண்பதற்கு மிக அழகாகக் காட்சி அளித்தது.




இத்தகு அழகிய அமைப்பைக் கண்ணுற்ற கூட்டத்தினர் கைதட்டினர். இவ்வாறு பூஜையின் போது கைதட்டுவது முறை கிடையாது என்றாலும் அவர்களின் சந்தோஷ மிகுதியால் அவ்வாறு செய்தனர்.


ஒருநாள் சுவாமிகள் பூஜை செய்து கொண்டிருந்த பொழுது அவரது உதவியாளர் இறைவனுக்கு நைவேத்யம் கொண்டு வந்தார்.




அந்த உணவின் சூடு குறையும் வரை காத்திருந்து பிறகு அதை நைவேத்யம் செய்தார். அவ்வளவு பக்தியுடன் அவர் பூஜை செய்வார்.

சுவாமிகள் ஒரு சுவாரசியமான கதையின் மூலமாகக் கடவுளை சிலை வடிவில் வழிபாடு செய்வதின் அர்த்தத்தை விளக்கினார் .














ஓர் இளம் வழக்கறிஞர் எதேச்சையாக சிருங்கேரி வந்தார். அப்பொழுது ருசிகரமான சம்பவம் ஒன்று நடந்தது. அந்த வழக்கறிஞர் அங்கு இருந்த சீடர் ஒருவரிடம் ......




சிறிது நேரத்தில் கதவு திறந்ததும் அந்த வழக்கறிஞர் பக்தர்கள் கூட்டத்துடன் உள்ளே சென்றார்.


சுவாமிகளைக் கண்டவுடன் அவர் நெடுஞ்சாண்கிடையாகக் காலில் விழுந்தார். அப்படியே சிறிது நேரம் இருந்தார். பிறகு.....





என்னை ஆசீர்வதியுங்கள்.
வெளியில் வந்தபின் அந்த வழக்கறிஞர் தான் முன்னே சந்தித்த அந்தச் சீடரைக் கண்டார்.
நான் ஏன் அவ்வாறு நடந்துகொண்டேன் என்று வியப்பாக உள்ளதா?
இல்லை, நான் இவ்வாறு பல நிகழ்வுகளைப் பார்த்துள்ளேன்.
சில சமயங்களில் சுவாமிகளை நாடி வந்தவர்கள் மட்டுமின்றி, மற்றவர்கள் கூட அவரது கருணையை பெற்றனர். ஒருமுறை புகழ்பெற்ற மருத்துவர் ஒருவரிடம் மிகவும் கவலைக்கிடமான நிலையில் ஒரு குழந்தையை அழைத்து வந்தனர்.
குழந்தையை மிகவும் தாமதமாக அழைத்து வந்திருக்கிறீர்களே! மன்னித்து விடுங்கள், என்னால் எதுவும் செய்ய இயலாது.
பெற்றோர்கள் மிகவும் கெஞ்சியதால், அந்தக் குழந்தையை அருகில் இருக்கும் ஒரு மருத்துவமனையில் அனுமதிக்குமாறு அவர் அறிவுறுத்தினார்.
அன்று இரவு அந்த மருத்துவரின் கனவில் அவருக்கு யார் என்றே தெரியாத ஒரு துறவி தோன்றினார்....
நீ ஏன் இந்த குறிப்பிட்ட மருந்துகளை அந்தக் குழந்தைக்கு கொடுக்கக் கூடாது...?
அந்த மருத்துவர் விழித்துக்கொண்ட பொழுது, அந்த குறிப்பிட்ட மருந்துகள் அந்தக் குழந்தைக்கு உதவக்கூடும் என்று உணர்ந்தார். அவர் மருத்துவமனைக்குச் சென்று அந்த மருந்துகளை குழந்தைக்குக் கொடுத்தார்.
அந்தக் குழந்தை குணமடைய ஆரம்பித்தது. விரைவில் வீடு திரும்பியது. மருத்துவர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.
சில தினங்களுக்குப் பிறகு, மீண்டும் அந்த மருத்துவரின் கனவில் அந்தத் துறவி தோன்றினார்
என்னை மறந்துவிட்டாயா?
நீங்கள் யார் என்றே எனக்குத் தெரியாதே!
நான் சிருங்கேரியில் இருக்கிறேன்.
அந்த மருத்துவர் சிருங்கேரிக்குச் சென்றார்.
ஓ! நான் கனவில் பார்த்தது இவரைத் தான்!



ஆன்மீகச் சாதனையில் நாட்டமுள்ளவர்களுக்கு சுவாமிகள் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். ஒருமுறை வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் தனக்கு வேதாந்தத்தில் இருக்கும் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் வேண்டி சிருங்கேரி வந்தார்.
நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?
இத்தாலி நாட்டிலிருந்து வந்துள்ளேன்.
அப்பொழுது சிஷ்ய ஸ்வீகாரத்திற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து கொண்டு இருந்தன. அதனால் மற்ற விஷயங்களுக்கு நேரம் ஒதுக்குவது என்பது சுவாமிகளுக்கு சாத்தியமற்ற ஒரு செயலாக இருந்தது. இருப்பினும் அவர் இதற்காக நேரம் ஒதுக்கினார்.
அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிரூட்டி, அவற்றின் உள்ளிருந்து ஒளிர்வது ஒரே பரம்பொருள்தான்.
மொழிபெயர்ப்பாளரின் உதவி கொண்டு, சுவாமிகள் அந்த வெளிநாட்டவரின் ஒவ்வொரு சந்தேகத்தையும் தீர்த்து வைத்தார்.
அவர் இவ்வளவு நேரம் இதற்கு ஒதுக்கியதை பற்றிக் கேட்டபொழுது, அவர் கூறினார்....
அவன் மிகுந்த நம்பிக்கையுடனும், அறிந்துகொள்ளும் ஆர்வத்துடனும் அவ்வளவு தொலைவிலிருந்து இந்தியா வந்துள்ளான். அவனுடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்வது எனது தலையாய பணி. எனவே அதற்கு நேரம் ஒதுக்குவதற்கு நான் கடமைப் பட்டவனாவேன்.
சுவாமிகள் குறிப்பிட்டச் சிலருக்கு வேதாந்த பாடங்கள் நடத்துவது வழக்கம். இந்த வகுப்புகள் பாரம்பரிய முறைப்படி நடக்கும். சுவாமிகள் சமஸ்கிருதத்தில் மட்டுமே பாடங்களை நடத்துவார். ஒருமுறை ஒரு வயதான தம்பதியினருக்கு இந்த வகுப்புகளில் கலந்து கொள்ள அனுமதி அளித்தார்.
முதல் நாள் வகுப்பிற்குப் பிறகு அந்த வயதானப் பெண்மணி சுவாமிகளிடம் வந்து ......
எனக்கு சமஸ்கிருதம் தெரியாது. அதனால் என்னால் வகுப்புகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.
உங்களால் அந்த நூலைப் புரிந்து கொள்ள முடியும்.
அடுத்த நாள் வகுப்பில்...
அவர் சமஸ்கிருதத்தில் கூறுவதின் அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது!
அந்த வயதானப் பெண்மணிக்கு வகுப்புகள் புரிய ஆரம்பித்தது மட்டும் இல்லாமல், முதல் நாள் வகுப்புகளில் நடத்தப்பட்டப் பகுதியின் அர்த்தமும் தெள்ளத்தெளிவாயிற்று. அத்தகையச் சக்தி பெற்றது சுவாமிகளின் வார்த்தைகள்.

சுவாமிகள் ஒருமுறை சிருங்கேரியிலிருந்து பெங்களூருக்குப் புறப்பட்டுக்கொண்டு இருந்தபொழுது ரிஷிகேஷிலிருந்து ஒரு பிரமச்சாரி வந்தார். அவர் சுவாமிகளின் சீடர் ஒருவருடன் உரையாடினார்.




விரைவில், யாத்திரையைத் தொடங்க வேண்டி சுவாமிகள் வெளியே வந்தார். அங்கு அந்தப் பிராமச்சாரியை அவர் கண்டபொழுது....









அந்தப் பிரமச்சாரியின் சந்தேகங்களைப் போக்க சுவாமிகள் பிரத்தியேகமாகக் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவரது ஆசிகள் மட்டுமே போதுமானதாக இருந்தது.




ஆன்மீக சக்தியின் களஞ்சியமாகத் திகழ்ந்தார் சுவாமிகள். தனது விருப்பத்தின் பேரில் நிர்விகல்ப சமாதி மற்றும் ஜீவன்முக்தியையும் கூட அவர் அருளியுள்ளார்.



சாரதா பீடத்திற்குத் தனது வாரிசாக ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேயலு என்ற புத்திகூர்மையுடைய, கடவுளிடம் மிகுந்த பக்திக் கொண்ட, பிரமச்சாரியை சுவாமிகள் தேர்ந்தெடுத்தார்.



*1974*ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *11*ஆம் நாள் அவருக்குத் துறவறம் வழங்கி ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள் என்ற பெயரையும் சுவாமிகள் வழங்கினார்.


ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள் கடுமையான தவத்தைக் கடைபிடித்தார். தனது குருவிடமிருந்து சாஸ்திரங்களைக் கற்றார். அவருடன் விஜய யாத்திரைகளில் சென்றார். அவர் குருவிடம் மிகுந்த பக்திக் கொண்டவராய் விளங்கினார்.




மக்களின் உண்மையான மற்றும் நிலையான நல்வாழ்வை உறுதி செய்வதற்காகத் தனது குரு காட்டிய வழியில், பாரதம் முழுவதும் சனாதன தர்மத்தைப் பரப்பும் உன்னதமானப் பணியை பல வருடங்களாக அவர் மேற்கொண்டு வருகிறார்.



சாஸ்திர ஞானத்தில் ஒப்பற்றவராகவும், கருணைக்கடலாகவும் விளங்கும் இவரை துறவிகள் முதல் நாட்டின் தலைவர்கள், பாமர மக்கள் வரை அனைவரும் போற்றிக் கொண்டாடுகின்றனர். சுவாமிகளின் முதன்மையான சீடரான இவர், தான் தனது குருவின் ஒப்பற்ற வாரிசு என்பதை நிரூபித்துத் திகழ்கிறார்.


தனது முதிர்ந்த வயதிலும் சுவாமிகள் தினமும் விடியற்காலை முதல் பின்னிரவு வரை இடைவிடாது உழைப்பதைக் கவனித்த ஒரு பக்தர்...
இந்த வயதிலாவது சுவாமிகள் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு சௌகரியமாக இருக்கலாமே?
வெல்லம், பாதாம் அல்வா இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால் நீ எதை எடுத்துக்கொள்வாய்?
நிச்சயமாக பாதாம் அல்வாவைத் தான்!
சரியாகச் சொன்னாய்! அதுபோலவே பரம்பொருளின் ஆனந்தத்தை அனுபவித்தவர்கள் இந்த உலக இன்பத்தைச் சிறிதும் நாட மாட்டார்கள்.
1982ல் சுவாமிகள் கடுமையான மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். மருந்துகளின் தாக்கத்தால் அரை மயக்க நிலையில் இருந்தார். தனது சுற்றுப்புறத்தைப் பற்றிய நினைவு இல்லாத நிலையில் கூட அவர் வாய்மலர்ந்த வார்த்தைகள் இவையே ...
இந்த மனதின் புண்ணிய மற்றும் பாவ காரியங்கள் எந்தவிதத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளான என்னைப் பாதிக்காது.
சுவாமிகளின் பரம்பொருளின் மீதான நிஷ்டை அத்தகு உச்சநிலையில் இருந்தது.
ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமிகள் தனக்குப் புதிதாக வந்துள்ள மூச்சுத் திணறல் பிரச்சனைப் பற்றி மருத்துவரிடம் கூறினார்.
ஓர் ஆயுர்வேத மருத்துவர் இதற்கு ஒரு மருந்து கொடுத்துள்ளார். அது எனக்கு நல்ல நிவாரணம் கொடுக்கிறது.
பின்னொருநாள் ....
மூச்சுத் திணறல் பிரச்சனை இப்பொழுது இல்லை அல்லவா?
ஓ .... அது மீண்டும் வந்து விட்டது. நான் அந்த ஆயுர்வேத மருந்து சாப்பிடுவதை நிறுத்திவிட்டேன்.
அந்த ஆயுர்வேத மருத்துவர் மிகவும் வயதானவர். இந்த மருந்தைச் செய்வதற்கு தேவையான பொருட்களை சேகரிக்க அவர் மிகவும் சிரமப்படவேண்டி உள்ளது. அந்த மருத்துவர் என்னவோ இந்த மருந்தை எனக்காகச் செய்து கொடுக்கத் தயாராகத்தான் உள்ளார். ஆனால் அவர் சிரமப்படுவதை நான் விரும்பவில்லை.
தனது உடல்நலனை விட, தனது மருத்துவரின் நலனே சுவாமிகளுக்கு முக்கியமாகத் தெரிந்தது. அத்தகைய கருணை உள்ளம் கொண்டவர் சுவாமிகள்.


செப்டம்பர் 1989ல் சுவாமிகளின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. அவரது அறையின் வெளியேப் படுத்துக்கொண்டிருந்த சீடர் நள்ளிரவில் விழித்துக் கொண்டார்.
நள்ளிரவு கடந்து விட்டது! சுவாமிகள் எவ்வாறு இருக்கிறார் எனப் பார்ப்போம்.
சப்தமில்லாமல் அவர் அறைக்குள் நுழைந்தார். சுவாமிகள் மிகுந்த வலியுடன் உறங்கமுடியாமல் விழித்துக்கொண்டு மெல்லிய குரலில் கடவுளின் பெயரை உச்சரித்தபடி இருப்பதைக் கண்டார்.
ஓ... நான் சத்தமாகக் கடவுளின் பெயரை உச்சரித்து உனது தூக்கத்தைக் கலைத்து விட்டேனோ?
அத்தனை வலியிலும் கூட அவர் அடுத்தவரின் சௌகரியத்தைப் பற்றிதான் கவலைப்பட்டார். என்றுமே அவர் தனது கஷ்டங்களைப் பொருட்படுத்தியதே இல்லை. உடலை விதியின் வசத்தில் விட்டு விட்டார்.
சுவாமிகள் தன் உடலானது எடுத்த பணியை முடித்துவிட்டது என்று கருதி 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் நாளன்று, தனது 71வது வயதில் பூதஉடலை நீத்தார்.
ஒருமுறை ஒரு பக்தனிடம் சுவாமிகள் கூறினார்....
கண்களுக்குப் புலப்படும் அதிசயங்களை யார் வேண்டுமானாலும் நிகழ்த்தலாம்.அடுத்தவர்களைக் கவர்வதற்கு மட்டுமேயன்றி, அவற்றால் வேறு எந்த பயனும் கிடையாது. ஒரு மனிதனை நல்வழிப்படுத்தி, அவனை மேலான நன்மையை நோக்கி அழைத்துச் செல்வதே ஒரு குருநாதர் செய்யும் மிகப் பெரிய வியத்தகு அதிசயமாகும்.
இத்தகைய அதிசயத்தை எண்ணிலா முறைகள் நிகழ்த்திய அற்புதமான துறவியான இவர், மனிதன் தன் வாழ்கையில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தனது வாழ்கையின் மூலமாக அனைவரும் வியக்கும் வண்ணம் வாழ்ந்துக் காட்டினார்.
அவர் நம்மிடையே இன்று இல்லை என்ற போதிலும், என்றென்றும் அவரின் கருணை மிகுந்த அருள்மழை, அவரை பக்தியுடன் நினைத்த மாத்திரத்திலேயே நம் அனைவருக்கும் கிட்டும் என்பது உறுதி.


# உபதேசங்கள்

கடவுளின் கருணை எல்லையற்றது. அதனால் அவனைச் சரணடைந்தோம் என்றால், நம்முடைய குற்றங்களையும் குறைகளையும் பொருட்படுத்தாமல் நம்மை ஏற்றுக்கொள்வான்.

“எப்படி நான் கஷ்டப்பட விரும்பமாட்டேனோ, அவ்வாறே மற்றவர்களுக்கும் எவ்வித கஷ்டமும் ஏற்படக் கூடாது” என்ற எண்ணம் கொள்ள வேண்டும்.

தர்மம் செய்வதினால் அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுடன், கொடுப்பவரின் ஆன்மீக நலனுக்கு அது மிகுந்த நன்மையை ஏற்படுத்தும்.

ஒருவன் உண்மையையே பேச வேண்டும். மேலும் ஒருவனின் வார்த்தைகள் மனதிற்கு இனிமையாகவும், மற்றவர்களுக்கு உபயோகம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.



மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய திறன் பெற்றவர்களாக நாம் இருக்கும் பொழுது, நாம் உதவி செய்வதுதான் முறையானச் செயலாகும்.

பல விதமான பொருட்களின் மீதான உரிமையே சாமான்யர்களின் சொத்து, பொருட்களின் உடைமையின்மையே அறிஞர்களின் சொத்தாகும்.

கோபம் தூண்டப்படும் வேளையிலும் மனக்கலக்கம் இன்றி இருந்தால் நாம் சான்றோராகலாம் .

தவறானப் போக்கு நம்மை ஆபத்தை நோக்கித் தள்ளும் பொழுது, அதை நாம் சுயமுயற்சி கொண்டு வெல்ல வேண்டும்.

அனைத்துப் பொருட்களின் சாரமும் இறைவனே ஆவார்.

இந்த உலகில் புகழ்ச்சி மற்றும் இகழ்ச்சி இரண்டிற்குமே மதிப்பு எதுவும் கிடையாது.

கடவுளின் கருணை அனைவருக்கும் உண்டு.

அடுத்தவர்களுக்கு நன்மை செய்வதே சான்றோர்களின் இயல்பு.

எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணித்துவிட்டு நாம் கவலையின்றி இருக்க வேண்டும்.

எப்பொழுதும் இறைவனின் சிந்தனையிலேயே இருத்தல் வேண்டும்.

மற்றவர்களின் குணநலன்களைப் போற்ற வேண்டுமேயன்றி, அவர்களிடம் குறைகளைத் தேடுவது மிகவும் தவறு.